முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம். விழுப்புரம்.

**S.C.No.69/2024**

**(LW.1) (PW - 1)**

| பெயர் | பாலமுருகன் | மதம் | |
|---|---|---|---|
| **த.பெ.** | வெங்கடேசன் | தொழில் | |
| ஊர் | மாமல்லபுரம் | வயது | 40 |
| மாவட்டம் | செங்கல்பட்டு | தேதி | 22.09.25 |

**இன்று** (22.09.2025) **சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.**

**1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர்** ,

**சத்தியமாக சொல்கிறேன்**

**முதல் விசாரணை**

நான் தற்போது மாமல்லபுரம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன், கடந்த 2.5.2018 ம் ஆண்டு கண்டமங்கலம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியிலிருந்தபோது அன்றை தினம் 12 மணியளவில் கண்டமங்கலம் பஸ் ஸ்டாப் அருகே 2 நபர்கள் கையில் தடி மற்றும் கத்தியுடன் தகராறு செய்துகொண்டிருப்பதாக கிடைத்த தகவலை அடுத்து காவலர் வெங்கடேசன் மற்றும் ராமன் ஆகியோருடன் கண்டமங்கலம் பஸ் ஸ்டாப் சொக்கலிங்கம் டீ கடை அருகே சென்றபோது கலிதீர்த்தான்குப்பத்தைச் சேர்ந்த் ஜனா (எ) சின்னஜெனா (எ) ஜெனார்தனன் மற்றும் அவரது நண்பரான கதிரவன் ஆகியோர் அங்கிருந்த கடைக்காரரிடம் நீங்கள் எல்லாம் மாமூல் தர வேண்டும்இ தரவில்லை என்றால் உங்களை காலி செய்துவிடுவோம் என்று மிரட்டி சொக்கலிங்கம் டீ கடையிலிருந்த டீ கிளாசை அடித்து நொறுக்கினார், அதனால் அங்கிருந்த பொது மக்கள் பயந்து சிதறி ஓடினர் இதனால் போக்குவரத்தும் ஸ்தம்பித்ததுஇ பின்பு நான் பார்ட்டி சகிதம் பிரச்சனை செய்தவர்களை பிடிக்க முற்பட்டபோது ஜனா என்பவர் அதுக்குள்ள போலீஸ்காரர் தேவடியா பசங்க வந்துட்டாங்க இவனுங்களை போட்டா தான் என்னை இனிமே பிடிக்க மாட்டாங்க என்று சொல்லி பிடிக்க முற்பட்ட என்னை இருடா உன்ன போட்டுத் தள்றேன் இதோட ஒழிஞ்சி போடா என்று சொல்லி கையில் வைத்திருந்த கத்தியால் எனது கழுத்து நோக்கி வெட்டினார் நான் சுதாரித்து குனிந்துகொள்ள அந்த வெட்டிலிருந்த தப்பினேன் இல்லையென்றால் நான் வெட்டுபட்டு இறந்திருப்பேன், போலிஸ் பார்ட்டி கதிரவனை பிடிக்க முற்பட்டபோது அவர் தன் கையில் இருந்த தடியை காட்டி தேவடியா பசங்களா பிடிச்சிங்கினா அவ்வளவு தான் என்று மிரட்டினார் பின்பு கதிரவன் சாம்பல் நிற ஸ்விட்டு காரில் தப்பி ஓட முற்பட்டவரை மடக்கி பிடித்தனர் அப்போது ஜனா கத்தியை காட்டி என்னை பிடிக்க வந்தினா உன்னை காலி பண்ணிடுவேன் என்று மிரட்டி விட்டு கத்தியை தூக்கி போட்டுவிட்டு தப்பி ஓடிவிட்டார், பின்னர் எங்களை பணி செய்ய விடாமல் தடுத்ததாலும்இ பொது அமைதிக்கு பங்கம் விளைவித்ததாலும் என் மீது கொலை முயற்சி செய்யப்பட்டதாலும் நடந்த சம்பவம் தொடர்பாக எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி காவல் ஆய்வாளரிடம் அன்றைய தினம் 13 மணிக்கு எழுத்து மூலமான புகார் கொடுத்தேன், அந்த புகார் அதசா,ஆ 1, காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்,

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

சண்டை போட்டுக் கொண்டது சம்பந்தமாக யார் எனக்கு தகவல் கொடுத்தது என்றால் என்னுடைய தகவலாளி கொடுத்த ரகசிய தகவல் சொக்கலிங்கம் டீக்கடைக்காரர் ஏதாவது புகார் கொடுத்தாரா என்றால் இல்லை வேறு யாரிடமாவது புகார் கொடுத்தாரா என்று எனக்கு தெரியாது 2 ,5,2018 பிறகு எவ்வளவு காலம் நான் அதை கண்டமங்கலம் காவல் நிலையத்தில் பணிபுரிந்தேன் என்றால் சரியாக ஞாபகம் இல்லை 2 5 2018 தேதிக்கு முன்பாக எவ்வளவு காலமாக நான் அதே காவல் நிலையத்தில் பணிபுரிந்தேன் என்றால் சுமார் ஒரு வருட காலம் பணிபுரிந்தேன் நான் கொடுத்த புகாரின் மீது காவல் ஆய்வாளர் எப்போது என்னை விசாரணை செய்தார் என்றால் அன்றைய தினம் மாலை சுமார் 18 மணியளவில் விசாரித்தார் நான் புகாரியில் தெரிவித்துள்ள தடி மற்றும் கத்தினுடைய அளவு குறித்து புகாரில்

தெரிவித்துள்ளேன் என்றால் அளவு குறிப்பிட்டு சொல்லவில்லை தடி மற்றும் கத்தியின் குறிப்பிட்ட அம்சங்கள் ஏதாவது புகாரியில் தெரிவித்துள்ளன என்றால் இல்லை கதிரவனை போலீசார் மடக்கி பிடித்ததாக நான் தற்போது விசாரணையில் சொல்லி உள்ளேன் என்னுடைய புகாரில் கதிரவனை காவல் நிலையத்திற்கு கொண்டு வந்து ஆஜர் செய்ததாக குறிப்பிட்டு சொல்லி உள்ளேன் என்றால் இல்லை கதிரவனை யார் காவல் நிலையம் அழைத்து வந்தது என்றால் நாங்கள் தான் அழைத்து வந்தோம் முதல் எதிரி ஜனார்த்தனன் என்பவரை யார் பிடித்தது என்றால் நான் புகார் கொடுத்த பிறகு காவல் ஆய்வாளர் பிடித்து இருப்பார் ஜனார்த்தனன் என்பவர் ஓட முயற்சித்ததாக சொல்லி உள்ளேன் அவரை என்னுடைய பார்ட்டி உடன் சேர்ந்து நான் பிடிக்கும் முயற்சி செய்தேனா என்றால் இல்லை ஒண்ணாவது எதிரியை அதற்கு முன்பாகவே பிடித்து வரப்பட்டு காவல் நிலையத்தில் அவரது கால்கள் உடைக்கப்பட்டது என்றால் சரியல்ல என்னால் கொடுக்கப்பட்ட புகாரியின் மீது வழக்கு பதிவு செய்யப்பட்ட பிறகு எதிரி ஜனார்த்தன் என்பவர் மீது குண்டர் தடுப்பு சட்டம் போடப்பட்டது என்றால் சரிதான் எதிரில் ஜனார்த்தனன் என்பவர் மீது குண்டர்சட்டம் போடுவதற்காகவே என்னால் பொய் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.
Sd/A.Tamilselvan, M.L.,
Principal Subordinate Judge,
Villupuram